

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மறமடக்கி ஏசிசி இளைஞர்கள், அண்ணா இலக்கியப் பேரவை, வெளிநாடு வாழ் நண்பர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் இணைந்து மறமடக்கி ஸ்ரீ பெருமாள் கோவிலில் நடத்திய மூன்றாம் ஆண்டு அன்னதான விழாவை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

### சாம்சங் : பிரச்சினைகளை ஊதி பெரிதுபடுத்துவதை தவிர்த்து

# தீர்வு காண முயற்சிக்க வேண்டும்!

## தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. வேண்டுகோள்!

சென்னை, அக். 15-

சாம்சங் தொழிலாளர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்வதை விட்டு பிரச்சினைகளை ஊதி பெரிதுபடுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அதற்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்றும் சி.ஐ.டி.யு.க்கு தொ.மு.ச. பேரவை பொதுச் 0செயலாளர் மு.சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத போதும் கூட இடதுசாரிகளை ஆதரித்த ஓர் இயக்கம். நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சியில் போட்டியிட்ட அனந்த நம்பியாருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்களின் கருத்தை நிராகரித்து அவரை ஆதரித்த வரலாறு உண்டு.

அதேபோல் போக்குவரத்துக் கழகத்தில் உயர்நீதிமன்ற ஆணைப்படி ஒரே சங்கமாக இருக்க வேண்டுமென்ற தீர்ப்பின்படி 2010ல் நடைபெற்ற தேர்தலில் தொ.மு.ச. 57% சதவிகித வாக்குகளைப் பெற்று முதன்மைச் சங்கமாகத் தேர்வு செய்யப்பட்டது. அப்போது சி.ஐ.டியு. 14% வாக்குகள் மட்டுமே பெற்றது. ஆனால் இச்செய்தியை கேள்விப்பட்ட கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வேலூர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது சி.ஐ.டி.யு. தோல்வி குறித்து தன் வருத்தத்தை தெரிவித்திருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் சென்னை மற்றும் சென்னை சுற்று வட்டாரத்தில் உள்ள தொழிற்சாலைகளில் நடைபெற்ற போராட்டங்களில் இடதுசாரிகளை அழைத்துப் பேசி ஓர் இணக்கமான முடிவுகளை மேற்கொண்டது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

ஏன்? கடந்த 2006-2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கூட ஹூண்டாய் நிறுவனத்தில் நடைபெற்ற போராட்டத்தில் தி.மு.க. அரசு சுமூகமாக பேசி போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. அந்தப் பிரச்சினையில் மறைந்த பேரவைத் தலைவர் அண்ணன் குப்புசாமி அவர்களும் நானும் அப்போது தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த தா.மோ.அன்பரசன் அவர்களும் எவ்வளவு முயற்சியில் ஈடுபட்டோம் என்பதை தொழிற்சங்க இயக்கங்கள் மறந்திருக்க முடியாது.

2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களான போக்குவரத்து, மின்வாரியம் மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் போனஸ் அறிவிப்பு அநீதியைக் கண்டித்து தன்னெழுச்சியாக 17 நாட்கள் நடைபெற்ற போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர நாம் அனைவரும் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில் நிபந்தனை ஏதுமின்றி வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றோம். அதன் விளைவாக பல தொழிலாளர்கள் பல்வேறு அடக்குமுறை, பணி நீக்கம், ஊதிய இழப்பு போன்றவற்றை எதிர்கொண்டோம். அப்போது நான் தந்த வாக்குறுதி அடிப்படையில் 2006ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு அமைந்தபோது பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணிக்கு எடுப்பது, வேலைநிறுத்த நாட்களை பணி நாளாகக் கருதி ஊதியம் வழங்குவது, தண்டனைகளை ரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை தி.மு.கழக அரசு செய்து தந்துள்ளது என்பது கடந்த கால வரலாறு.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு கொண்டு வந்த தீர்மானம் 1949 முதல் சங்கம் அமைக்கும் உரிமை 87, கூட்டுபேரம் எண்.98 ஆகிய தீர்மானங்கள் இந்தியா உட்பட ஏன் சீனாவில் கூட ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பது அனைவரும் அறிந்த உண்மை. இருப்பினும் தமிழ்நாட்டில் சங்கங்களைப் பதிவு செய்வதில் எந்தவித பாரபட்சமும் இல்லாமல் பதிவு செய்து கொடுப்பதும் பேச்சு வார்த்தைக்கு வராத நிர்வாகத்தை அழைத்து பேசுவதும் இதனால் பலன் அடைந்தது அதிகமாக சி.ஐ.டி.யு. சங்கம் தான் என்பதை மறந்து இந்த சாம்சங் பிரச்சினையை மிகவும் பெரிதுபடுத்தி அதனை முடிவுக்குக் கொண்டுவர இயலாத நிலை ஏற்படுவதை எங்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் தங்களுடைய வருத்தத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

இந்நிலையில் இந்தப் போராட்டம் சம்மந்தமாக நீங்கள் கொடுத்த அறிக்கையின்படி நாங்கள் அறிந்து கொள்வது சங்கத்தை பதிவு செய்ய தொழிலாளர் துறையில் கொடுத்து இருப்பதாகவும், அது காலதாமதமாகி உள்ளது. அதனால் தாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும் மற்றும் நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்து ஒரு தேக்க நிலையை உருவாக்கி தொழிலாளர் துறை பதிவு எண் வழங்கவில்லை என்று அரசின் மீது குறை சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? அனைத்து அமைச்சர்களும் நீங்கள் கேட்டுக் கொண்டபடி தீர்ப்பு வந்தவுடன் பதிவு எண் வழங்குவதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இது சாம்சங்குக்கு மட்டும் புதிதல்ல. *State Bank of India*ல் உள்ளவர்கள் தங்கள் சங்கத்தை பதிவு செய்தபோது SBI நிர்வாகம் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கின் இறுதியில் பதிவு எண் வழங்கலாம் என தீர்ப்பு கிடைத்த பின் அச்சங்கத்திற்கு பதிவு எண் வழங்கப்பட்டது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

ஒரு சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றால் ஒரு சங்கம் பதிவு செய்து ஒரு ஆண்டு காலம் முடிந்தவுடன் அங்கீகாரம் கோரலாம். அப்படி நிர்வாகம் வழங்காவிட்டால் *State Implementation of EvaluationState Implementation of Evaluation* கமிட்டிக்கு விண்ணப்பித்து தங்களுடைய உறுப்பினர்களை நிரூபித்து அதன்படி அதிக உறுப்பினர்களை பெற்றிருந்தால் அரசு அச்சங்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கலாம்.

ஆனால், இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி எந்தவொரு சங்கத்தையும் அங்கீகரிப்பதற்கான ஒரு சட்டம் தற்பொழுது இல்லை. அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். சட்டம் இல்லாதபோது சட்டப்படி அரசு நடக்கவில்லை என்று நீங்கள் குறை கூறுவதில் என்ன நியாயம் உள்ளது?

இந்தப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஜூலை 7 ஆம் தேதி நான் டெல்லியில் இருந்து புறப்பட்டு வந்து உங்களோடு பேசி உங்கள் கோரிக்கைகளை தொழிலாளர் நல அமைச்சர் முன்பாக விவரித்து அதன் மீது தீர்வு காண்பதற்கு முயற்சிகள் தொடர்ந்து எடுத்து வருவதை மறந்திருக்கமாட்டீர்கள். அதன் பிறகு தொழிலாளர் துறையில் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் நிர்வாகம் ஒத்துக் கொள்ளவில்லை என்று நீங்கள் எடுத்துக் கூறிய பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறியது அரசு மேற்கொண்ட முயற்சி தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு இல்லையா? அமைச்சர்கள் குழுவிடம் நீங்கள் தொழிற்சங்கப் பதிவு பிரச்சினை நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு அந்த கோரிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி விட்டீர்கள். ஆனால் உங்கள் கோரிக்கை பட்டியலை தந்து இதன்படி நிர்வாகம் எங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்கப்படவில்லையா? ஆனால் சாம்சங் நிர்வாகம் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் ஊதிய உயர்வு வழங்கி வருகின்றது. அதன்படி 1.4.2025க்குப் பிறகு தான் புதிய ஊதிய உயர்வு வழங்க முடியும் என்று நிர்வாகம் கூறி விட்டது. இந்நிலையில் அமைச்சர்கள் சாம்சங் நிர்வாகத்தை நிர்ப்பந்தித்து இடைக்கால நிவாரணமாக ரூ.5000/ மற்றும் நீங்கள் வைத்த கோரிக்கைகள் சில வற்றையும், வைக்காத சில கோரிக்கைகளையும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டுவிட்டதாக உங்களிடம் தெரிவித்தது தொழிலாளர் ஆதரவு நிலை யில்லையா? இவை அனைத்தையும் மறைத்து புதிய கோணத்தில் அரசை நிர்வாக ஆதரவு நிலை எடுப்பது போல் சித்தரித்து போராட்டத்தை பெரிதுபடுத்தி, இப்போது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பல சிக்கல்கள் மேலும் மேலும் உருவாகி வருகிறது. இதனால் சகோதர அமைப்புகளாக உள்ளவர்கள் எவ்வாறு நல்ல முடிவு எடுக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒன்றை நாங்கள் நினைவுபடுத்த விரும்புகின்றோம் நாங்களும் சங்கம் அமைத்து ஒசூரிலும் அம்பத்தூரிலும் பல தொழிற்சாலைகளில் போராடி வேலையிழந்து தொழிலாளர்கள் தவிப்பதும், அதற்கு தீர்வுகாண நடவடிக்கை கள் மேற்கொள்ள இயலாமல் இருப்பதையும் அனைவரும் அறிவார்கள். பல நிர்வாகங்கள் பெரும்பான்மை தொழிலாளர்களை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட தொழிலாளர்களை வைத்து ஒப்பந்தம் போட்டிருப்பது தமிழ் நாட்டிற்கு ஒன்றும் புதியது அல்ல. சாம்சங்கில் மட்டும் நடப்பதாக சித்தரித்து பெரிதுபடுத்துவது சரியல்ல.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லா முயற்சிகளும் மேற்கொண்டு வரும் சூழலில் அவரை தரம்தாழ்ந்து பேசுவதும், அவரை விமர்சிப்பதும் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சரியாக இருக்குமா என்பதை நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பிரச்சினையில் இளைஞர்கள், தொழிற்சங்கம் அனுபவம் இல்லாதவர் கள் உணர்ச்சி வசப்பட்டு போராட்டத்தில் இறங்கி விடுவது என்பது ஒன்றும் புதியது அல்ல. ஆனால் அனுபவம்மிக்க தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களிடம் இதனை எடுத்துக்கூறி இந்தப் போராட்டத்தை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசு எல்லா நிலைகளிலும் தங்களுடைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு உறுதுணையாக தொ.மு.ச. பேரவையும் செயல்பட்டு வருகிறது. அந்த சூழலில் தாங்கள் பிரச்சினையை மேலும் பெரிதுபடுத்தாமல் ஓர் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தங்கள் அனுபவத்தை கொண்டு முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




நாகை மாவட்டம் வேதாரண்யம் நகரக் கழக சார்பில் முரசொலி முன்னாள் ஆசிரியரும் சிறந்த எழுத்தாளர், மூத்த பத்திரிகையாளருமான முரசொலி செல்வம் மறைவையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், நகர மன்றத் தலைவர் மா.மி. புகழேந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும் – கழக

# தோழர்களுக்கும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (Blc)

## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01-01- 2025 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 9.11.2024 (சனிக்கிழமை), 10-11- 2024 (ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024 (சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024.
2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 09.11.2024(சனிக்கிழமை), 10.11.2024(ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை).
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு:** வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### அனந்தபுரம் பேரூராட்சியில்

# ரூ. 32 லட்சத்தில் நூலக கட்டிடம், காத்திருப்போர் கூடம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு!

செஞ்சி, அக் 15-

விழுப்புரம் மாவட்டம், அனந்தபுரம் பேரூராட்சியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நூலக வளர்ச்சி திட்டத்தின் கீழ் அனந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் ரூபாய் 22 லட்சம் மதிப்பீட்டில் புதிய அதிநவீன நூலகம் கட்டிடமும், அனந்தபுரம் செஞ்சி சாலையில் அயோத்திதாசர் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காத்திருப்போர்கூடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.


இப்பணிகளை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது பணிகள் தரமாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும் என அவர்அறிவுறுத்தினார்.

ஆய்வின் போதுசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், நகர செயலாளர் சம்பத், துணை தலைவர் அமுதா கல்யாண் குமார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தனலட்சுமி அறிவழகன், தமிழரசி கன்னியப்பன், சுமதி கிருஷ்ணமூர்த்தி, ஜேம்ஸ் ,செல்வி ஞானசேகர், அன்வர்பாஷா, அனந்தபுரம் நகர அவை தலைவர் டாக்டர் கல்யாண் குமார், பொருளாளர் பாபு ஐயர், துணைச் செயலாளர் ராஜேந்திரன், நிர்வாகிகள் தக்ஷிணாமூர்த்தி, அனையேரி ரவி, அரசு ஒப்பந்ததாரர் சரவணன், செல்வமணி, பிரசன்னா, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கரு. செயல்மணி

## அக்டோபர் 15 (2014)



**1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.**

**“1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்” என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி” எனவும்;**

**இரங்கல் செய்தியில் “இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன் ?” என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பல்லடத்தில் பனைவிதைகள் நடவு!

திருப்பூர். அக். 15–

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி குன்னாங்கல்பாளையம் ஓடை பகுதியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பியர்கள் துறையின் சார்பில் பனை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் பனை விதைகள் வெகுஜன நடவு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதில் தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் சு.ச.சசிகலா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.